Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com R.DIS No: 60/2021 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான சிறப்பு
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 1 சென்னை | தினசரி | 4 பக்கம் சனிக்கிழமை, ஆகஸ்ட் 28, 2021 4 பக்கங்கள் ரூ.2/- இதழ் 45

இலங்கைத் தமிழர்களுக்கு, இனி பாதுகாப்பான, கவுரவமான, மேம்படுத்தப்பட்ட வாழ்க்கை அமைத்துத் தருவதை இந்த அரசு உறுதிசெய்யும்

முதல்வர் மு.க. ஸ்டாலின்

சென்னை, ஆகஸ்ட் 28 2021: முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் சட்டசபையில் இன்று 110-வது விதியின் கீழ் ஒரு அறிக்கை வாசித்தார். அதில் கூறி இருப்பதாவது:- "கடல் நீர் ஏன் உப்பாக இருக்கிறது என்றால், கடல் கடந்து வாழும் தமிழர்களின் கண்ணீரால்" என்று எழுதினார் பேரறிஞர் பெருந்தகை அண்ணா. அத்தகைய பேரறிஞர் அண்ணா அவர்களுடைய வழி நடக்கக்கூடிய இந்த அரசின் சார்பில், கடல் கடந்து வந்த இலங்கைத் தமிழ் மக்களின் கண்ணீரைத் துடைக்கக்கூடிய வகையில் சில அறிவிப்புகளை சட்டப்பேரவை விதி 110-ன்கீழ் இன்று வெளியிட நான் விரும்புகிறேன்.

இலங்கை நாட்டில் வாழும் தமிழ் மக்கள் 1983-ம் ஆண்டு ஏற்பட்ட இனக்கலவரத்திற்குப் பிறகு, கடல் கடந்து தமிழ்நாட்டிற்கு வரத் தொடங்கினார்கள். அத்தகைய தமிழ் மக்களை அன்று முதல் இன்று வரையிலும் நாம் அரவணைத்துக் காப்பாற்றி வருகிறோம்; அவர்களுக்கு வாழ்வாதாரம் வழங்கி வருகிறோம்.

திராவிட முன்னேற்றக்கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற தருணங்களில் எல்லாம் இதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இலங்கைத் தமிழர்களின் நலனில் எப்போதும் அக்கறை கொண்ட முத்தமிழறிஞர் கலைஞருடைய ஆட்சியிலே, கடந்த 1997-1998-ம் ஆண்டில், முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு, 2 கோடியே 6 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 3 ஆயிரத்து 594 புதிய வீடுகள், தலா 5 ஆயிரத்து 750 ரூபாய் செலவில் கட்டிக் கொடுக்கப்பட்டன.

மேலும், இதர உட்கட்டமைப்பு வசதிகளைச் சீரமைப்பதற்கு 2 கோடியே 66 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டது.

1998-1999 -ம் ஆண்டில், தலா 7 ஆயிரத்து 700 ரூபாய் மதிப்பீட்டில், 3 ஆயிரத்து 826 வீடுகள், 2 கோடியே 94 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டன. கடந்த 2-11-2009 அன்று "இலங்கை அகதிகள் முகாமில் உள்ள அடிப்படைத் தேவைகள்" குறித்த ஒரு ஆய்வுக் கூட்டத்தை முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நடத்தினார்கள். அதனடிப்படையில், அப்போது துணை முதல்-அமைச்சராக இருந்த என்னையும், அமைச்சர்களையும் இலங்கை அகதிகள் முகாம்களுக்கு அனுப்பி ஆய்வு நடத்தி, அறிக்கை தர உத்தரவிட்டார்.

அப்படி ஆய்வு செய்துவிட்டு, திரும்பி வந்து நாங்கள் அப்போது கொடுத்த அறிக்கையினை ஏற்று, இலங்கை அகதிகள் முகாம் வீடுகள் பழுதுபார்ப்பது, புதுப்பிப்பது, புதிய கைப்பம்புகள், கழிப்பிட வசதிகள் ஏற்படுத்துவது உள்ளிட்ட இலங்கை அகதிகள் முகாம்களில் இருக்கும் தமிழர்களின் வாழ்வாதாரத்திற்குத் தேவையான 14 அடிப்படைப் பணிகளை 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி செய்து கொடுத்த முதலமைச்சர்தான் கலைஞர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த அவையிலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

அதுமட்டுமின்றி, முதுநிலைப் பட்டப்படிப்பு பயிலும் அனைத்து முகாம்வாழ் மாணவர்களையும் ஊக்குவிக்கும் வகையில், அவர்களின் கல்வி மற்றும் விடுதிக் கட்டணங்களை அரசே ஏற்றுக்கொள்ளும். இதற்காக ஆண்டுதோறும் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களில் ஆண்டொன்றுக்குத் தோராயமாக, 750 மாணவர்கள் அரசு மற்றும் பிற கல்லூரிகளில் கலை, அறிவியல் மற்றும் பட்டயம் உள்ளிட்ட தொழிற்படிப்புகள் படித்து வருகின்றனர். இவர்களுக்கு வழங்கப்படக்கூடிய கல்வி உதவித்தொகை போதுமானதாக இல்லை என அறியப்பட்டுள்ளது.

இவர்களுக்குப் பாலிடெக்னிக் படிப்பிற்கு 2,500 ரூபாய், இளநிலை கலை மற்றும் அறிவியல் படிப்பிற்கு 3,000 ரூபாய், இளநிலை தொழில்சார்ந்த படிப்புகளுக்கு

5,000 ரூபாய் கல்வி உதவித்தொகையாக ஏற்கெனவே வழங்கப்பட்டு வருகிறது. இனி, இதை உயர்த்தி, பாலிடெக்னிக் படிப்பிற்கு 10 ஆயிரம் ரூபாய்; இளநிலை கலை மற்றும் அறிவியல் பட்டப்படிப்பிற்கு 12 ஆயிரம் ரூபாய்; இளநிலை தொழில்சார்ந்த படிப்புகளுக்கு 20 ஆயிரம் ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக 1 கோடியே 25 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து, அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்திடவும், அவர்கள் தங்களது வேலைவாய்ப்புத் தகுதியினை உயர்த்திக் கொள்ளவும், வேலைவாய்ப்புடன் கூடிய திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்படும். இதற்காக ஐந்தாயிரம் முகாம் வாழ் இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்க 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திடவும், சிறு குறு தொழில்கள் செய்திட ஏதுவாகவும், முகாம்களில் உள்ள 300 சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி மற்றும் சமுதாய முதலீட்டு நிதியாக, ஒவ்வொரு சுயஉதவிக் குழுவுக்கும் தலா ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமின்றி, கடந்த ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட 321 சுயஉதவிக் குழுக்களுக்கு, ஏற்கனவே வழங்கப்பட்ட 50 ஆயிரம் ரூபாயுடன், மேலும் 75 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக நடப்பு நிதி ஆண்டில் 6 கோடியே 16 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு, மாதந்தோறும் அவர்களுடைய வாழ்வாதாரத்திற்காகப் பணக்கொடை வழங்கப்பட்டு வருகிறது. இந்தத் தொகையானது, குடும்பத் தலைவருக்கு ஆயிரம் ரூபாயும், இதர பெரியவர்களுக்கு 750 ரூபாயும், 12 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு 400 ரூபாயும் வழங்கப்பட்டு வருகிறது.

இந்தப் பணக்கொடை, கடந்த பத்தாண்டு காலமாக உயர்த்தப்படாத நிலையில், இனி குடும்பத் தலைவருக்கு மாதந்தோறும் 1,500 ரூபாய், இதர பெரியவர்களுக்கு 1,000 ரூபாய் மற்றும் 12 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு 500 ரூபாய் என்று உயர்த்தி வழங்கப்படும். இதனால் அரசிற்கு ஆண்டொன்றுக்குக் கூடுதலாக 21 கோடியே 49 லட்சம் ரூபாய் செலவாகும்.

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டு வரும் மண்எண்ணெய் ஒதுக்கீடு மிகக் குறைந்த அளவிலேயே உள்ளது. பிரதம மந்திரி உஜ்வாலா திட்டத்தின்கீழ் இவர்களுக்கு எரிவாயு இணைப்புப் பெற இயலாத நிலை உள்ளது.

எனவே, ஒவ்வொரு குடும்பத்திற்கும் விலையில்லா எரிவாயு இணைப்பு மற்றும் இலவச அடுப்பு வழங்கப்படும். இதற்காக அரசிற்கு ஒருமுறை 7 கோடி ரூபாய் செலவினம் ஏற்படும். அதைத் தவிர, குடும்பத்திற்கு 5 எரிவாயு உருளைக்குத் தலா 400 ரூபாய் வீதம் மானியத் தொகை வழங்கப்படும். இதற்காக 3 கோடியே 80 லட்சம் ரூபாய் ஆண்டுதோறும் ஒதுக்கீடு செய்யப்படும்.

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு தற்போது 20 கிலோவிற்கு மேல் வழங்கப்படும் அரிசிக்கு, கிலோ ஒன்றிற்கு 57 பைசா வீதம் மானியம் வழங்கப்படுகிறது. இதனை இனி ரத்து செய்து, அவர்கள் பெறும் முழு அரிசி அளவும் விலையில்லாமல் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கான செலவுத் தொகையான 19 லட்சம் ரூபாயையும் அரசே ஏற்றுக்கொள்ளும்.

இதைத்தவிர, முகாம்களில் வசிக்கக்கூடிய இலங்கை அகதிகளுக்கும், வெளிப்பதிவில் உள்ள அகதிகளுக்கும் உரிய உதவிகளை வழங்கிடவும், அடிப்படை வசதிகளை மேம்படுத்திடவும், குடியுரிமை வழங்குதல் மற்றும் அவர்களில் இலங்கை திரும்பும் அகதிகளுக்கு தகுந்த ஏற்பாடுகள் செய்தல் போன்ற நீண்டகாலத் தீர்வினைக் கண்டறிய ஏதுவாகவும், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், சட்ட மன்ற உறுப்பினர் ஒருவர், பொதுத் துறை செயலாளர், மறுவாழ்வுத் துறை இயக்குநர் மற்றும் பிற அரசு உயர் அலுவலர்கள், அரசு சாரா உறுப்பினர்கள், முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுடைய பிரதிநிதி மற்றும் வெளிப்பதிவில் வசிக்கக்கூடிய அகதிகளுக்கான பிரதிநிதி ஆகியோரை உள்ளடக்கிய ஒரு ஆலோசனைக்குழு நிச்சயமாக விரைவில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், தமிழ்நாட்டில் உள்ள முகாம் வாழ் இலங்கைத் தமிழர் நலனைப் பேணிட இந்த அரசு வீடு மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதி மேம்படுத்தலுக்கு 261 கோடியே 54 லட்சம் ரூபாய், அவர்களது கல்வி மற்றும் வேலைவாய்ப்பினை உறுதி செய்திட 12 கோடியே 25 லட்சம் ரூபாய் மற்றும் அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திட 43 கோடியே 61 லட்சம் ரூபாய், மொத்தம் 317 கோடியே 40 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திடும் என்பதை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்குள்ள தமிழர்களை மட்டுமல்ல; கடல் கடந்து வாழக்கூடிய தமிழர்களையும் காக்கக்கூடிய அரசுதான் இந்த அரசு என்பதைக் கூறி அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வாறு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசினார்.

விதி மீறி டூ வீலர் கார்களில் செல்லாதீர்கள் கண்காணிக்கும் 'சிசிடிவி'கேமராக்கள்

சிவகங்கை, ஆகஸ்ட் 28 2021: சிவகங்கை மாவட்டத்தில் தேசியதேசிய, மாநில நெடுஞ்சாலை, நகர்புற ரோடுகளில் சாலை விதிகளை மீறி வாகனங்களை ஓட்டி செல்லாதீர்கள். "கேமரா ஆதாரத்தை வைத்து அபாதரம் விதிக்கப்படுகிறது மாவட்டத்தில் தேசிய மாநில நெடுஞ்சாலை, நகர்புற ரோடுகளில் ரோந்து பணியில் ஈடுபடும் போலீசார் டூ வீலர், கால்களில் வருவோரிடம் விதி மீறி வந்தால் அபதாரம் விதிக்கப்படும் என தெரிவிக்கப் படுவதில்லை மாறாக ரோட்டில் நிற்கும் போலீசார் வாகன எண்ணிக்கை குறித்துக் கொண்டு வாகன உரிமையாளர் பெயருக்கு அபதாரம் விதிக்கின்றனர்.

குறிப்பாக முக கவசம், தலைக் கவசம்அணியவில்லை. ஓவர் ஸ்பீடு, சீட் பெல்ட் இல்லை என விதிமுறை மீறலுக்கான அபதாரம் விதிக்கும் போலீசார் சம்பந்தப்பட்ட வண்டியின் உரிமையாளர் அலைபேசிக்கு அபராத தொகைக்கான குறுந்த வலை அனுப்பி, நீதிமன்றத்தில் செலுத்துமாறு கூறிவிடுகின்றனர்.

வாகன ஓட்டிகள் மீறிச் சென்றால் நம்மை யாரும் கவனிக்க மாட்டார்கள் என நினைக்காதீர்கள். போலீசார் ரோட்டோரமாக நின்று வண்டி எண்களை மட்டுமே குறித்து அபதாரத்தை விதிக்கின்றனர்.

சிவகங்கை எஸ்.பி. செந்தில் குமார் கூறியதாவது: மாவட்டத்தில் பெரும்பாலான இடங்களில் சிசிடிவி கேமராக்கள் வைத்து கண்காணித்து வருகிறோம். போலீசார் ரோட்டில் நின்று வாகனங்களை வழிமறித்து அபதாரம் விதிக்க வேண்டிய அவசியம் இல்லை. வண்டி எண்ணை குறித்துக் கொண்டு விதிமீறல் இருந்தால் அபராத தொகையை அனுப்புகின்றனர்.

இதற்கான ஆதாரமாக 'சிசிடிவி', கேமராவில் ஆவணங்களையும் சேகரித்து அனுப்புவார்கள் எனவே ரோட்டில் விதிமுறைப்படி வாகனங்களை ஓட்டி

விபத்தை தவிர்க்க வேண்டும், என்றார்.

விதிமீறல் வழக்கு 1293 பதிவு நாளொன்றுக்கு இம்மாவட்டத்தில் தலைக்கவசம் இன்ரி டூவீலர் ஓட்டியதாக 550, அலைபேசி பேசியபடி டூவீலர், கார் ஓட்டியதாக 35, சீட் பெல்ட் இன்றி ஓட்டியதாக179 என 1293 பேர்களுக்கு அபதாரம் விதித்துள்ளனர்.

மனைவியை கொன்று ஐந்து வருடங்களாக தலைமறைவாக இருந்த கணவர் கைது

கிருஷ்ணகிரி, ஆகஸ்ட் 28 2021: கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டம் பாரூர் அருகில் உள்ள மோட்டுப்பட்டியை சேர்ந்த ராஜமாணிக்கம் மகள்

மயில் என்பவருக்கும் சேலம் கிச்சிப்பாளையத்தை சேர்ந்த பெருமாள் மகன் சக்திவேல் என்பவருக்கும் 20 வருடங்களுக்கு முன்பு திருமணமாகி ஒரு மகன் மற்றும் மகள் உள்ளனர். இருவருக்குமிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக இருவரும் பிரிந்து மயில் மோட்டுப்பட்டியில் உள்ள தன்னுடைய அம்மா வீட்டில் குழந்தைகளுடன் வசித்து வந்து காரியமங்கலம், அரசம்பட்டி, அகரம், கம்பைநல்லூர், போச்சம்பள்ளி ஆகிய இடங்களில் உள்ள வார சந்தைகளுக்கு சென்று மகனுடன் துணி வியாபாரம் செய்யும் போது மயிலின் கணவர் சக்திவேல் சந்தைக்கு வந்து தகராறு செய்வது வழக்கம். அதே போல் 25.12.2016 ம் தேதி மாலை 05.30 மணிக்கு போச்சம்பள்ளி சந்தையில் மயில் தன் மகனுடன் துணி வியாபாரம் செய்து கொண்டிருந்த போது மயிலின் கணவர் சக்திவேல் சந்தைக்கு வந்து தகாத வார்த்தையால் திட்டி மறைத்து வைத்திருந்த சூரி கத்தியால் மனைவி மயிலை பல்வேறு இடங்களில் குத்தி காயத்தை ஏற்படுத்தி உள்ளார். காயம்பட்ட மயிலை கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சை அளித்தனர் மயில் கொடுத்த வாக்கு மூலத்தின் பேரில் போச்சம்பள்ளி காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்ட நிலையில் கிருஷ்ணகிரியில் இருந்து மேல் சிகிச்சைக்காக சென்னை ராஜீவ்காந்தி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த மயில் 14.01.2017 ம் தேதி இறந்துள்ளார். ஆகவே இவ்வழக்கை கொலை

வழக்காக மாற்றம் செய்யப்பட்டு எதிரி சக்திவேலை கடந்த 5 வருடங்களாக தேடியும் கிடைக்கவில்லை.

இந்நிலையில் கிருஷ்ணகிரி மாவட்டம் காவல் கண்காணிப்பாளர் உத்தரவின் பேரிலும், பர்கூர் காவல் துணைக் காணிப்பாளர் அவர்களின் அறிவுரை படியும் எதிரியை தேட சிறப்பு அலுவலாக பாரூர் காவல் ஆய்வாளர் திரு. ராஜேஷ், போச்சம்பள்ளி காவல் உதவி ஆய்வாளர் மகேந்திரன், முதல் நிலை காவலர் திரு ராமகிஷ்ணன், பர்கூர் காவல் நிலைய முதல்நிலைக் காவலர் அப்துல் சலாம் ஆகியோர்களை சிறப்பு அலுவலாக 20.8.21 ம் தேதி மும்பை அனுப்பப்பட்டனர். அங்கு பல்வேறு குற்ற வழக்குகளிலும் சம்பந்தப்பட்டு தலைமறவாக இருந்த சக்திவேலை கண்டுபிடித்து கைது செய்து இன்று 26.08.21. ம் தேதி காவல் நிலையம் அழத்து வரப்பட்ட சக்திவேலை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைக்கப்பட்டார். தனிப்படை காவலர்களை மாவட்ட காவல் கண்கானிப்பாளர் அவர்கள் பாராட்டினார்கள்.

பெங்களூரில் இருந்து சேலத்திற்கு ஈச்சர் லாரியில் குட்கா பான்மசாலா கடத்தியதில் ஒருவர் கைது மற்றொருவர் தப்பி ஓட்டம்

கிருஷ்ணகிரி, ஆகஸ்ட் 28 2021: கிருஷ்ணகிரி மாவட்டம், கர்நாடக மாநிலம் பெங்களூர் பகுதியில் இருந்து கிருஷ்ணகிரி மாவட்ட வழியாக தமிழகத்திற்கு குட்கா பான்மசாலா கடத்தப்படுவதாக மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சாய் சரண் தேஜஸ்விக்கு ரகசிய தகவல் கிடைத்தது இதையடுத்து கடத்தலை தடுக்கும் வகையில் தீவிர ரோந்து கண்காணிப்பு மற்றும் சோதனைக்கு உத்தரவிட்டார்.

அதன்படி கிருஷ்ணகிரி உதவி காவல் கண்காணிப்பாளர் சரவணன் தலைமையில் தாலுகா காவல் நிலைய ஆய்வாளர் சரவணன் மேற்பார்வையில் உதவி ஆய்வாளர்கள் சின்னசாமி பிரகலநாதன் மற்றும் காவலர்கள் ஆசைத்தம்பி குமார் ஆகியோர் கிருஷ்ணகிரி பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் சுங்க சாவடி (டோல்கேட்) அருகே வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது பெங்களூரில் இருந்து சேலம் நோக்கி சென்ற ஈச்சர் லாரியை சந்தேகத்தின் பேரில் போலீசார் நிறுத்தினர்

போலீசார் இருப்பதை கண்ட லாரி ஓட்டுனர் வாகனத்தை நிறுத்தாமல் தொடர்ந்து இயக்கினார். இதனை அறிந்த போலீசார் 100 அடிக்கு பின்தொடர்ந்து சென்று வாகனத்தை மடக்கி பிடித்தனர் அப்போது ஈச்சர் லாரியில் இருந்த ஒருவர் தப்பி

ஓடிவிட்டார் ஓட்டுநர் மற்றும் ஈச்சர் லாரி உரிமையாளரை போலீசார் மடக்கிப்பிடித்தனர்.

பின்னர் லாரியை சோதனை செய்தபோது அதில் அரசு தடை செய்யப்பட்ட குட்கா பான்மசாலா இருப்பது கண்டறியப்பட்டது விசாரணையில் பெங்களூரில் இருந்து சேலத்திற்கு கடத்திச் செல்வது தெரியவந்தது இதையடுத்து போலீசார் லாரி ஓட்டுநர் மற்றும் உரிமையாளருமான பருகூர் அடுத்த கல்லாத்துப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த அன்பு (35) என்பவரை கிருஷ்ணகிரி தாலுக்கா காவல் துறையினர் கைது செய்தனர்.

மேலும் தப்பி ஓடிய முரளி என்பவரை போலீசார் தேடி வருகின்றனர்.இது தொடர்பாக வழக்கு பதிவு செய்துள்ள போலீசார் 5 லட்சம் மதிப்பிலான குட்கா பான் மசாலா மற்றும் ஏழு லட்ச ரூபாய் மதிப்பிலான ஈச்சர் லாரி என 12 லட்சம் மதிப்பிலான பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு உள்ளதாக தெரிவித்துள்ளனர்.

கோவையில் இரண்டு குழந்தைகளுடன் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட பெண் சோக சம்பவம்

கோவை, ஆகஸ்ட் 28 2021: கோவை, நேபாளத்தைச் சேர்ந்தவர் ராஜ்குமார் (24). இவரது மனைவி டன்கலா (22). இந்த தம்பதியினருக்கு அலிசா என்ற மூன்று வயது பெண் குழந்தை, ருத்ரா என்ற ஒரு வயது ஆண் குழந்தை உள்ளனர்.

இவர்கள் அனைவரும் குப்பனூர் பகுதியில் தங்கி உள்ளனர். மேலும், ராஜ்குமார் மாட்டுப் பண்ணையில் வேலை செய்து வருகிறார்.

ராஜ்குமார் வழக்கம் போல் வேலைக்கு சென்றுள்ளார். பின்னர் மதிய உணவுக்காக வீடு திரும்பியுள்ளார். அப்போது வீடு உள் புறமாக பூட்டப்பட்டு இருந்தது.

சந்தேகமடைந்த ராஜ்குமார் ஜன்னல் வழியாக எட்டிபார்த்த போது மனைவி டன்கலா மற்றும் இரண்டு குழந்தைகளும் தூக்கில் தொங்கியதை பார்த்து அதிர்ச்சியடைந்து கதவை உடைத்து உள்ளே சென்றுள்ளார்.

அப்போது 3 பேரும் உயிரிழந்திருப்பதை பார்த்து கதறி அழுதுள்ளார். இதனை பார்த்த அக்கம்பக்கத்தினர் போலீசுக்கு தகவல் அளித்தனர்.

அதன்பேரில், சம்பவ இடத்திற்கு சென்ற பேரூர் போலீசார் மூவரின் உடலையும் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக கோவை அரசு மருத்துவமனைக்கு

அனுப்பி வைத்தர்.

தொடர்ந்து ராஜ்குமாரிடம் போலீசார் விசாரணை நடத்தினர். அப்போது தனது மனைவிக்கு தொடர் தலைவலி மற்றும் உடல் உபாதையால் அவதிபட்டுவந்ததாக அவர் கூறியுள்ளார். தொடர்ந்து அவரிடம் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இந்த சம்பவம் கோவையில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

சனிக்கிழமை,
ஆகஸ்ட் 28, 2021

திருப்பூரில் இந்திரா சுந்தரம் தொண்டு நிறுவனம் சார்பில் அன்னை தெரசா பிறந்த நாளை முன்னிட்டு போர்வை, துண்டு, அரிசி, ஆயிரம் ரூபாய் ரொக்கம்

திருப்பூர்: திருப்பூரில் இந்திரா சுந்தரம் தொண்டு நிறுவனம் சார்பில் அன்னை தெரசா பிறந்த நாளை முன்னிட்டு திருப்பூர் இந்திரா சுந்தரம் தொண்டு நிறுவனம் சார்பில் 15 வேலம்பாளையம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் தொழுநோயால் பாதிக்கப்பட்ட மூன்று குடும்பங்களுக்கு போர்வை துண்டு அரிசி ஆயிரம் ரூபாய் ரொக்கம்ஆகியவைகளை 15 வேலம்பாளையம் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர் கலைச்செல்வன் முன்னிலையில் இந்திரா சுந்தரம் தொண்டு நிறுவனத்தின் நிறுவனத்தலைவர்சமூகசேவகி இந்திராசுந்தரம் நேரில் சென்று வழங்கினார். இந்நிகழ்வில் மருத்துவம் சாரா மேற்பார்வையாளர் பாஸ்கரன், அழகு சுந்தரம், ஜெய் ஸ்ரீ மோகன், சித்ரா ஆகியோர் உடன் இருந்தனர்.

மதுரை: மதுரை மாநகர் காவல்துறை சார்பாக காவல் நிலையத்திற்கு வரும் பொதுமக்களுக்கு உதவுவதற்காக அனைத்து காவல் நிலையங்களிலும் வரவேற்பாளர்கள் நியமிக்கப்பட்டு காவல் நிலையங்களுக்கு வரும் பொதுமக்களுக்கு உதவி செய்து வருகின்றனர்.

மேலும் காவல் நிலையத்திற்கு வரும் பொதுமக்கள் மற்றும் மனுதாரர்கள் காவல் நிலையத்தின் வெளியே காத்திருப்பதை தவிர்க்கும் பொருட்டு மதுரை மாநகர் காவல் ஆணையர் அவர்களின் உத்தரவின்படி மதுரை மாநகரின் அனைத்து காவல் நிலையங்களிலும் மனுதாரர்களுக்காக காத்திருப்பு அறை உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் பொதுமக்கள் காவல் நிலையத்தில் அதிகாரிகளை சந்திக்கும்வரை, காத்திருப்பு அறையை பயன்படுத்தி பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். புதிதாக கட்டப்பட்டுள்ள காவல் நிலையங்களில் காத்திருப்பு அறை ஒதுக்கப்பட்டு கட்டப்பட்டுள்ளது. மற்ற காவல் நிலையங்களில் மனுதாரர்கள் பயன்பெறும் வகையில் காவல் நிலையங்களுக்கு வெளியே தனியாக ஒதுக்கப்பட்ட இடத்தில் காத்திருப்பு அறை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

E- SEVA CENTER
STAR RAINBOW SERVICES
11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026.
8148231942 / 8144337349
DTP & DESIGN
ALL ONLINE SERVICES

விருதுநகர்: விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டாரம், கவுண்டம்பட்டி ஊராட்சியில் மதிமகள் பெண்கள் பாதுகாப்பு மையம் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கதின் திட்ட இயக்குனர் தெய்வேந்திரேன் தலைமையில், உதவி திட்ட அலுவலர் பொன்குமார் மற்றும் கிறிஸ்டோபர் முன்னிலையில் மதிமகள் பெண் குழந்தை பாதுகாப்பு மையத்தின் முதலாம் ஆண்டு விழா நடைபெற்றது. இவ்விழாவில், சிவகாசி வட்டார மேலாளர் முருகேஸ்வரி, ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டார மேலாளர் த.விஜயலட்சுமி, கவுண்டம்பட்டி ஊராட்சி மன்ற தலைவர், உபதலைவர், ஆசிரியர் மற்றும் அன்பால் இணைவோம் நலச்சங்கம் உறுப்பினர்கள், மகளிர் குழு உறுப்பினர்கள் கிராம மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கோவை அரசு கலை கல்லூரியில் இளங்கலை பட்டப்படிப்பிற்கான கலந்தாய்வு தொடங்கியது

கோவை, ஆகஸ்ட் 28 2021: கோவை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், 23 இளநிலை படிப்புகள், 21 முதுகலை படிப்பு மற்றும் 16 ஆராய்ச்சி படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கை கலந்தாய்வு துவங்கி உள்ளது. முதல் நாளில் மாற்றுத்திறனாளிகள், என்சிசி மாணவர்கள், விளையாட்டு பிரிவு, இராணுவ வீரர்களின் குழந்தைகளுக்கு கலந்தாய்வு நடைபெறுகிறது. இதர மாணவர்களுக்கு துவங்கியது. இதில் மாணவர்கள் பலரும் கலந்து கொண்டனர். இது குறித்து பேசிய கல்லூரியின் முதல்வர் சித்ரா இளங்கலை படிப்பில் 1,443 இடங்களுக்கு மொத்தம் 19,053 பேர் விண்ணப்பித்துள்ளனர். முதல் நாளான இன்று முன்னாள் ராணுவ வீரர்கள் குழந்தைகள், மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு, என்.சி.சி மாணவர்களுக்கு கலந்தாய்வு துவங்கியுள்ளதாக தெரிவித்தார். காமர்ஸ் படிப்பிற்கும் வரும் 31 ஆம் தேதி கம்ப்யூட்டர் சயின்ஸ், தகவல் தொழில்நுட்பம், கணிதம், வேதியல் உள்ளிட்ட படிப்புகளுக்கும், 2 ஆம் தேதி புள்ளியியல் புவியியல் உள்ளிட்ட படிப்புகளுக்கும், 4ஆம் தேதி பொருளாதாரம், பொதுப்பணி நிர்வாகம் படிப்புகளுக்கும், 7 ஆம் தேதி வரலாறு தமிழ் ஆங்கிலம் உள்ளிட்ட படிப்புகளுக்கும் மாணவர் சேர்க்கைக்கான கலந்தாய்வு நடைபெற உள்ளதாக கூறினார்.

கலந்தாய்வுக்கு வரும் மாணவர்கள் பத்தாம் வகுப்பு மற்றும் 11, 12ஆம் வகுப்புக்கான மதிப்பெண் சான்றிதழ்கள் சாதி சான்றிதழ் மாற்றுச் சான்றிதழ் மற்றும் கலந்தாய்வுக்கான கடிதம் மற்றும் புகைப்படங்களுடன் வரவேண்டுமென கல்லூரி நிர்வாகம் அறிவித்துள்ளதாக தெரிவித்தார். கலந்தாய்விற்கு வரும் மாணவர்கள் கட்டாய முகக்கவசம் அணிய வேண்டும், கல்லூரி நுழைவு வாயிலில் மாணவர்கள் கிருமி நாசிகள் கொண்டு கையை கழுவிய பின்னரே உள்ளே செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

ஆதார் கைரேகை பதிவுக்கு சிறப்பு முகாம் நடத்த பொதுமக்கள் கோரிக்கை

வருஷநாடு, ஆகஸ்ட் 28 2021: தமிழ்நாடு முழுவதும் ஒரே மாநிலத்தைச் சேர்ந்த மக்கள் அடுத்த மாநிலங்களில் உள்ள அனைத்து ரேஷன் கடைகளிலும் உணவு பொருட்கள் வாங்கும் வகையில் ஒரே நாடு ஒரே ரேஷன் கார்டு என்ற திட்டத்தை மத்திய அரசு கொண்டு வந்தது. இதையடுத்து ஏற்கனவே நடைமுறையிலிருந்த பாயிண்ட் ஆப் சேல் மிஷின் மாற்றிவிட்டு பதிலாக விரல் ரேகை பதிவு செய்யும் பயோமெட்ரிக் மிஷின் கொண்டுவரப்பட்டது. இதில் குடும்ப உறுப்பினர்கள் யாரேனும் ஒருவர் கைரேகை பதிவு செய்து ரேஷன் பொருட்கள் வாங்கி வந்தனர். இதில் பலருக்கு கைரேகை பதிவு ஆகவில்லை இடையில் கொரோனா தொற்று காரணமாக மீண்டும் அம்முறை நிறுத்தப்பட்டு பழைய முறையில் ரேஷன் பொருட்கள் பொதுமக்கள் பெற்றுச் சென்றனர். மீண்டும் பயோமெட்ரிக் முறை நடைமுறைக்கு வந்ததால் கைரேகை பதிவு ஆகாதவர்களுக்கு பொருட்கள் வழங்க முடியாது என ரேஷன் கடை ஊழியர்கள் கூறிவருகின்றனர். மேலும் ஆதாரில் பதிவு இல்லை என கூறி தனியார் இ சேவை மூலம் அதிக கட்டணம் செலுத்தி பதிவு செய்து வருகின்றனர் குறிப்பாக கடமலை மயிலை ஒன்றியத்தில் பெரும்பாலான கிராமம் மலை கிராமம் ஆகும். இதில் சிக்னல் கிடைப்பது சிரமம் இதனால் வேறு கடைகளில் கை ரேகை பதிவு செய்து மற்றொரு கடைகளில் ரேஷன் பொருட்கள் வாங்கும் அவல நிலையும் உள்ளது முதியோர்கள் இதனால் சிரமப்படுகின்றனர் கூலி வேலைக்கு செல்பவர்கள் வேலையை நிறுத்திவிட்டு பொருட்கள் வாங்க வேண்டிய சூழ்நிலையும் உள்ளது.

இதனால் ரேஷன் கடை ஊழியர்களுக்கும் பொதுமக்களுக்கும் வாக்குவாதம் ஏற்படுகிறது எனவே கைரேகை நடைமுறை சட்டத்தை திரும்பப்பெற வேண்டும். எனவும் அல்லது ஆதார் கைரேகை பதிவுக்கு மாவட்ட நிர்வாகம் சிறப்பு முகாம் நடத்த வேண்டும். என பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் கேட்டுக் கொள்கின்றனர்.

மதுரை காமராஜர் பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் சத்தியமூர்த்திக்கு 'பன்னாட்டு முத்தமிழ் விருது' 2021 என்னும் உயரிய விருது வழங்கி கவுரவிக்கப்பட்டது

மதுரை, ஆகஸ்ட் 28 2021: மதுரை, காமராஜர் பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் சத்தியமூர்த்திக்கு சுவிட்சர்லாந்து நாட்டின் அரசு அங்கீகாரம் பெற்ற ஜெனிவா கலை இலக்கியப் பேரவையின் சார்பாக பன்னாட்டு முத்தமிழ் விருது 2021 என்னும் உயரிய விருது வழங்கி கவுரவிக்கப்பட்டது.

மதுரை காமராஜர் பல்கலைக்கழக தமிழியர் புல தமிழியல் துறை தலைவரும் தமிழக அரசின் தமிழ்ச் செம்மல் விருது வருமான முனைவர் சத்தியமூர்த்திக்கு ஸ்விட்சர்லாந்து நாட்டின் அரசு அங்கீகாரம் பெற்ற ஜெனிவா கலை இலக்கியப் பேரவையின் சார்பாக பன்னாட்டு முத்தமிழ் விருது 2021 இன்று வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

இந்திய திருநாட்டின் 72 ஆவது சுதந்திர தின விழாவினை முன்னிட்டு சுவிட்சர்லாந்து ஜெனீவா கலை இலக்கியப் பேரவையின் சார்பாக இணைய வழியாக ஒழுங்கு செய்யப்பட்ட சர்வதேச கலைஞர்கள் மற்றும் கல்வி அவர்களுக்கு நடைபெற்ற பாராட்டு விழாவில் மதுரை காமராஜர் பல்கலைக்கழக தமிழ் துறை தலைவரும் தமிழக அரசின் தமிழ்ச் செம்மல் விருதாளர் மான முனைவர் சத்தியமூர்த்திக்கு அவர்களின் இயல் இசை நாடக பணிகளை பாராட்டி பன்னாட்டு முத்தமிழ் விருது எனும் உயரிய பட்டத்தை வழங்கி சிறப்பித்தது.

மதுரை காமராஜர் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவரும் தமிழக அரசின் தமிழ்ச் செம்மல் விருதாளர் மான முனைவர் சத்தியமூர்த்திக்கு அவர்கள் ஆற்றி வரும் தமிழ் பணிகளையும் தமிழரின் தொன்மை சிறப்புகளையும் பண்பாடுகளையும் பன்னாட்டு மரபு செல்வங்களையும் உலகறிய செய்யும் நோக்கில் செயலாற்றி வருவதையும் தமிழரின் கலை

செல்வங்களையும் தமிழரின் தெருக்கூத்து நாடக கலையை பேணிப் பாதுகாத்து வளர்த்து வருவதையும் ஆவணப்படுத்துவது மற்றும் பல்வேறு சமூகப் பணிகளையும் பாராட்டி சர்வதேச அமைப்பான சுவிட்சர்லாந்து ஜெனிவா கலை இலக்கியப் பேரவையின் சார்பாக முத்தமிழ் விருது 2021 என்னும் உயரிய விருது வழங்கி கவுரவிக்கப்பட்டது.

வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சரின் அறிவுறுத்தலின்படி கிரையப்பத்திரம் வழங்கும் சிறப்பு முகாம்

மதுரை, ஆகஸ்ட் 28 2021: மதுரை வீட்டு வசதி பிரிவிற்குட்பட்ட மதுரை, விருதுநகர், தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் அமைந்துள்ள பல்வேறு திட்டப்பகுதிகளில் ஒதுக்கீடு பெற்று முழுத் தொகையும் செலுத்திய ஒதுக்கீடுதாரர்களுக்கு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சரின் அறிவுறுத்தலின்படி கிரையப்பத்திரம் வழங்கும் சிறப்பு முகாம் மதுரை எல்லீஸ் நகர் வீட்டு வசதி வாரிய செயற்பொறியாளர் மற்றும் நிர்வாக அதிகாரி அலுவலகத்தில் நடைப்பெற்றது.

கண்காணிப்பு பொறியாளர் தியாகராஜன் செயற்பொறியாளர்கள் இருளப்பன், அன்புமணி, விற்பனை மற்றும் சேவை மேலாளர் கபீர் முகம்மது, ராஜேஸ்வரி ஆகியோரது ஏற்பாட்டில் நடைப்பெற்ற சிறப்பு முகாமில் ஒதுக்கீடு செய்யப்பட்டவர்களுக்கு கிரைய பத்திரம் வழங்கப்பட்டது.

பொறியாளர் பாலமுருகன் உள்ளிட்ட வீட்டு வசதி வாரிய பொறியாளர்கள், அதிகாரிகள், கண்காணிப்பாளர்கள், கார்த்திக், ரெங்கசாமி, ராஜேந்திரன், மாரி சங்கர் உதவி வருவாய் அதிகாரிகள் கண்ணன், உதவி வருவாய் அதிகாரிகள் இப்ராகிம், கண்ணன் ஆகியோர் சிறப்பு முகாமிற்கான ஏற்பாட்டினை சிறப்பாக செய்திருந்தனர்.

அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் மாநில துணைத்தலைவர் மத்தியகுழு உறுப்பினர் எஸ். கர்ணன் தேவர் அவர்கள் இல்ல திருமண விழா

திருப்பூர், ஆகஸ்ட் 28 2021: அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் மாநில துணைத்தலைவர் மத்தியகுழு உறுப்பினர் எஸ். கர்ணன் தேவர் அவர்கள் இல்ல திருமண விழா திருப்பூர் ஊத்துக்குளி ரோடு இருக்கும் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இத்திருமணத்திற்கு வருகை புரிந்து தலைமையேற்று திருமணத்தை நடத்தி வைத்தவர் மாநில பொதுச்செயலாளர் டாக்டர் பி□.வி. கதிரவன் எக்ஸ் எம்.எல்.ஏ, தேசிய செயலாளர் சி. தேவராஜன் திருமண விழாவிற்கு ஆசி வழங்கிய கோவை காமாட்சிபுரி ஆதீனம் சிவலிங்கேஸ்வர ஸ்வாமிகள்.

இந்து முன்னணியின் மாநில தலைவர் காடேஸ்வரா சி. சுப்பிரமணியம். திராவிட முன்னேற்ற கழக திருப்பூர் தெற்கு மாநகர பொறுப்பாளர் டி கே டி நாகராஜ். வடக்கு மாநகர பொறுப்பாளர், நா.தினேஷ்குமார் பாரதிய பார்வர்ட் பிளாக் கட்சியின் நிறுவன தலைவர் முருகன் ஜி. மதுரை மாவட்ட முன்னாள் மேயர் பி.எம். மன்னன்.

அகில இந்திய முக்குலத்தோர் பாசறை என் நிறுவனத் தலைவர் வி ஜி சிற்றரசு தேவர் தென்னிந்திய பார்வர்ட் பிளாக் கட்சியின் நிறுவனத் தலைவர் கே சி திருமாறன் ஜி. தென்னாட்டு மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் கணேஷ் தேவர் தமிழ்நாடு கொங்கு இளைஞர் பேரவை நிறுவனத் தலைவர் தனியரசு எக்ஸ் எம்.எல்.ஏ

தமிழ் தேசிய பார்வர்டு பிளாக் கட்சியின் நிறுவனத் தலைவர் உசிலை சங்கிலி, அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சியின் மாநில செயலாளர் திண்டுக்கல் பி.எஸ். ஜெயராமன், திருப்பூர் மாவட்ட தேவர் பேரவை தலைவர் சீனிவாசன், மூவேந்தர் முன்னணி கழக மாநில பொருளாளர், வி.டி. பாண்டியன்.

இந்திய கம்யூனிஸ்ட் மாவட்ட செயலாளர் ஆர்.ரவி. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் காமராஜர். பாரதிய ஜனதா கட்சியின் மாவட்ட பொதுச் செயலாளர் காடேஸ்வரா தங்கராஜ், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் திருப்பூர் மாநகர் மாவட்ட செயலாளர் ரோபோ ரவிச்சந்திரன். இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் திருப்பூர் மாநகர் மாவட்ட தலைவர் கிருஷ்ணன், ஒருங்கிணைந்த திருப்பூர் தேவரின கூட்டமைப்பு தலைவர்கள் ஸ்ரீ மகா சக்தி அறக்கட்டளை நிறுவனத்தலைவர் குளோபல் மு. பூபதி. பாட்டாளி மக்கள் கட்சி நிர்வாகிகள் மற்றும் அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சியின் மாநில மாவட்ட நகர நிர்வாகிகள் சமூக இடைவெளியை பின்பற்றி கலந்து கொண்டனர்.

ஓராண்டாகியும் நிறைவு பெறாத வனத்துறை கட்டிடம்

வருஷநாடு, ஆகஸ்ட் 28 2021: கடமலை மயிலை ஒன்றியம் தும்மக்குண்டு ஊராட்சி வண்டியூர் பிரிவு அருகே தற்காலிக வாகன சோதனை சாவடி அமைத்து அவ்போது வாகனத் தணிக்கையில் ஈடுபட்டும் மலைப்பகுதியில் வனத்துறையினர் ரோந்து செல்வது வழக்கம். இப்பகுதியில் பணிபுரியும் வனத்துறையினருக்கு தங்கும் விடுதி கட்டப்பட்டு ஓராண்டு ஆகியும் நிறைவு பெறாத நிலையில் முட்புதர்கள்

அடர்ந்து உள்ளது. இந்த கட்டிடத்தை ஒரு சிலர் சமூக விரோத செயலுக்கு பயன்படுத்தி வருகின்றனர். என்ற தகவல் வெளியாகி உள்ளது. எனவே பாதியில் தங்கும் விடுதியை பயன்பாட்டிற்கு கொண்டு வரவேண்டு மென அப்பகுதி மக்கள் கோரிக்கை வைக்கின்றனர்.

போர்டிஸ்-சிந்தால் இணைந்து தடுப்பூசிக்கு பிந்தைய விழிப்புணர்வு பிரசாரம்

சென்னை, ஆகஸ்ட் 28 2021: நாடு முழுவதும் கோவிட் -19 தடுப்பூசி போடும் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. பொது மருத்துவமனைகள் மற்றும் தனியார் சேவை வழங்குநர்கள் ஆகியோருக்குத் தான் இதற்கு நன்றி சொல்ல வேண்டும். தடுப்பூசி போட்டுக் கொள்ளும் மக்களுக்கு அதற்கு பிந்தைய சுகாதாரம் மற்றும் உடல் நலம் குறித்து ஏராளமான கேள்விகளும், சந்தேகங்களும் உள்ளன. ஒரு சில தனிநபர்கள் தடுப்பூசிக்கு பிந்தைய முழுமையான சுகாதார நடவடிக்கைகளை முற்றிலும் புறக்கணிக்கும் நிலையும் உள்ளது. மற்றொரு புறத்தில் தடுப்பூசிக்கு பின்னர், தான் முற்றிலும் நோய் எதிர்ப்பு சக்தி கொண்டவர்களாக மாறி விட்டதாக நம்புவதே இதற்கு காரணம். இதை கருத்தில் கொண்டு, அது போன்றவர்களை இலக்காக வைத்து ஒரு முன்னெடுப்பு திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. கோத்ரேஜ் கன்ஸ்யூமர் புரொடக்ஸ் லிட் நிறுவனத்தின் சுகாதார சோப் பிராண்டான சிந்தால் ஹெல்த் பிளஸ் மற்றும் வடபழனியில் உள்ள பிரபலமான போர்டிஸ் மருத்துவமனையும் இணைந்து தடுப்பூசிக்கு பிந்தைய விழிப்புணர்வு திட்டத்தில் கைகோர்க்கின்றன.

தடுப்பூசிக்கு பிந்தைய முன்னெச்சரிக்கைகள். செய்ய வேண்டியவை, செய்யக் கூடாதவை குறித்தும், தடுப்பூசிக்கு பின்பும் மேற்கொள்ள வேண்டிய சுகாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள பொது மக்களை ஊக்குவிப்பதுமே இதன் குறிக்கோள் ஆகும். வாரம் முழுமைக்குமான சோதனை முயற்சியாக இந்த செயல் திட்டம் ஏற்கனவே வடபழனியில் உள்ள போர்டிஸ் மருத்துவமனையில் தொடங்கப்பட்டுவிட்டது. அதில் தடுப்பூசி தொகுப்பு ஒன்று முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகிறது.

மிகவும் வலுவான விதத்தில் வெளிப்புற பாதுகாப்புக்கு முக்கியத்துவம் அளிக்கும் சிந்தால் ஹெல்த் பிளஸ் சோப் புத்துணர்ச்சியூட்டும் நறுமணத்துடன் முழுமையான பாதுகாப்பை அளிக்கிறது. நாட்டில் உள்ள தனியார் சுகாதார சேவை வழங்கும் நிறுவனங்களில் முன்னணி நிறுவனமான ஃபோர்ட்டிஸ் ஹெல்த்கேர், நாடு முழுவதும் உள்ள தனது 24 மருத்துவமனைகளுடன் இணைந்து தடுப்பூசி செலுத்தும் பணியை நிர்வகிப்பதில் முன்னணியில் உள்ளது.

சிந்தால் ஹெல்த் பிளஸ், ஃபோர்ட்டிஸ் மருத்துவமனையுடன் இணைந்து தடுப்பூசிக்கு பிந்தைய விழிப்புணர்வு தொகுப்பை உருவாக்கியுள்ளது. அந்த தொகுப்பில் அடங்கியுள்ள முக்கிய சுகாதார வழிகாட்டுதல் மூலம் இது தொடர்பான தகவல்களை அளித்து மக்களை வலுப்படுத்த இயலும். மிகவும் கவனமாக உருவாக்கப்பட்ட அத் தொகுப்பில் கோவிட் 19 குறித்து துண்டறிக்கை ஒன்று, தடுப்பூசிக்கு பின்பு செய்ய வேண்டியவை, வேண்டாதவை குறித்து மிகவும் எளிமையான மொழியில் விளக்கப்பட்டுள்ளது. மேலும் அத்தொகுப்பு பாதுகாப்பு மற்றும் சுகாதார தயாரிப்புகளான சிந்தால் ஹெல்த் பிளஸ் கிருமி நீக்கும் சோப்பு, சானிடைசர், மாஸ்க், கையுறை, முகக் கவசம், முகம் துடைக்கும் காகிதம் உள்ளிட்டவைகளை கொண்டுள்ளன.

எங்களது தடுப்பூசிக்கு பிந்தைய விழிப்புணர்வு திட்டம், மிகப் பெரிய தேசிய அளவிலான கோவிட்- 19 தடுப்பூசி செலுத்தும் செயல்பாட்டுக்கு ஒரு சிறிய அளவிலான பங்களிப்பு ஆகும். போர்ட்டிஸ் உடனான எங்களது குறிக்கோளை அடிப்படையாக கொண்ட பிணைப்பு தடுப்பூசி செலுத்திக் கொண்ட தனிநபர்களுடன் நேரடி தொடர்பை ஏற்படுத்தும் வாய்ப்புகளை உருவாக்கும். சென்னையில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த பரிசோதனை முயற்சி நேர்மறையான விளைவுகளை உருவாக்கும் என்று நம்புகிறோம். இதன் மூலம் மேலும் பல்வேறு நகரங்களில் இது போன்ற முன்னெடுப்புகளுக்கு உத்வேகம் அளிப்பதாக அமையும்" என்றார்.

இந்த பிணைப்பு குறித்து சென்னை, ஃபோர்ட்டிஸ் மருத்துவமனை மண்டல இயக்குநர் டாக்டர் சஞ்சய் பாண்டே கூறுகையில், கோவிட் காலத்தில் அடிப்படை சுகாதாரத்தை பேண வேண்டிய அவசியம் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த சிந்தால் ஹெல்த் பிளஸ் உடன் கூட்டு சேர்வதில் நாங்கள் பெரு மகிழ்ச்சி அடைகிறோம். தடுப்பூசி செலுத்திக் கொண்ட பின்பு, அடிப்படையான சுகாதாரம், தூய்மை, மாஸ்க் அணிவது, சமூக இடைவெளியை பின்பற்ற வேண்டிய அவசியம் இல்லை என பெரும்பாலோனோர் மத்தியில் தவறான புரிதல் உள்ளது. தற்போது செலுத்தப்படும் இரண்டு தவணை தடுப்பூசியானது கோவிட் பாதிக்கப்பட்டவர்களை ஐசியுவில் சேர்க்கப்படுவதிலிருந்தும், குறைவான தொற்றிலிருந்து மீண்டு வரவும் உறுதியாக உதவுகிறது என்பதில் சந்தேகம் இல்லை. அதே நேரத்தில், தடுப்பூசியின் செயல்திறன் காலம், வைரஸின் உருமாற்றங்கள் மற்றும் அதன் பாதிப்புகள் குறித்து ஆய்வு செய்து புரிந்து கொள்ளும் செயல்பாடுகளில் மருத்துவ நிபுணர்கள் ஈடுபட்டுள்ளனர். தடுப்பூசிக்கு முன்பாகவும் கூட, தனிநபர் ஒழுங்கு மற்றும் சமூக இடைவெளி ஆகியன வைரஸ் தொற்று பரவுவதிலிருந்து ஒவ்வொருவரையும் பாதுகாத்துள்ளது. தடுப்பூசி செலுத்திக் கொண்ட போதிலும் கூட, தற்போதும் அது போன்ற ஒழுங்கு மற்றும் சமூக இடைவெளியை கடைபிடிக்க வேண்டியது அவசியமாகும். சமூக இடைவெளி கொள்கையை கடைபிடித்து சமூக பரவலை கட்டுப்படுத்தி பாதுகாப்போடு இருக்க ஒவ்வொருவரையும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்" என்றார்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

மதுபோதையில் அரசு பேருந்தை இயக்கிய ஓட்டுநர்

கிருஷ்ணகிரி, ஆகஸ்ட் 28 2021: கிருஷ்ணகிரி சென்னை தேசிய நெடுஞ்சாலையில் அரசு விரைவு பேருந்து இருசக்கர வாகனத்தில் சென்றவர் மீது மோதி விபத்து இரு சக்கர வாகனத்தில் வந்தவர் கிருஷ்ணகிரியை சேர்ந்த தக்ஷன மூர்த்தி (35 வயது) இவர் பர்கூர் அரசு மகளிர் கலைக் கல்லூரியில் கெஸ்ட் லக்ட்சர் ஆக பணிபுரிந்து வருகிறார். சம்பவ இடத்திற்கு வந்த கிருஷ்ணகிரி மாவட்ட காவல்துறை விசாரணை மேற்கொண்ட போது பேருந்து ஓட்டுநர் மது போதையில் இருந்துள்ளார். பேருந்து ஓட்டுநரை காவல் நிலையம் அழைத்து சென்று விசாரணை நடத்தி வருகின்றனர்.

DTP
DESIGN
All Online Services
8144337349

தூத்துக்குடி மாவட்டம் கோவிட் 19 தடுப்பு விழிப்புணர்வு நடவடிக்கைகள்

தூத்துக்குடி, ஆகஸ்ட் 28 2021: தூத்துக்குடி மாவட்டத்தில், கொரோனா-19 தீவிர தடுப்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதிகயாக பொது மக்களுக்கு 01.04.2021 முதல் 26.08.2021 முடிய மொத்தம் 8601 காய்ச்சல் பரிசோதனை முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. இதன் தொடர்ச்சியாக 27.08.2021 அன்று காலை 9.00 மநு முதல் மாலை 4.00 மணிவரை கீறுழ்க்கண்ட இடங்களில் பொது மக்களுக்கு காய்ச்சல் பரிசோதனை மற்றும் தடுப்பூசி முகாம்கள் நடத்தப்படவுள்ளன.

பொதுமக்கள் அனைவரும் மேற்கண்ட முகாம்களில் தவறாது கலந்து கொண்டு தூத்துக்குடி மாவட்டத்தில் கொரோனா-19 தடுப்பு நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும், தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் 24 மணி நேரமும் இயங்கும் கட்டுப்பாட்டு அறைக்கு 1077 கட்டணமில்லா தொலைபேசி எண் மூலமும், 0461-2340101 மற்றும் 9486454714 ஆகிய தொலைபேசி எண்களிலும் பொது மக்கள் கொரோனா நோய்த் தொற்று குறித்து தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். என மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.கி.செந்தில் ராஜ், தொரிவித்துள்ளார்.

வேப்பூரில் ஸ்டுடியோவிற்குள் புகுந்த பாம்பை தீயணைப்பு துறையினர் உயிருடன் மீட்டு, காப்பு காட்டில் விட்டனர்

வேப்பூர், ஆகஸ்ட் 28 2021: கடலூர் மாவட்டம், வேப்பூர் அடுத்த அரியநாச்சியைச் சேர்ந்தவர் ரஞ்சித், (வயது 37) வேப்பூர் பஸ் நிலையம் எதிரில், சர்வீஸ் சாலையில் ஸ்டுடியோ கடை வைத்துள்ளார்.

இந்நிலையில், ஆகஸ்ட் 26- ந் தேதி மதியம் 3:00 மணியளவில், அவரது கடையின் ஏ.சி., வென்டிலேட்டரில் பாம்பு உள்ளதை கண்டு அதிர்ச்சி அடைந்தார்.

தகவலறிந்து வந்த வேப்பூர் தீயணைப்பு நிலைய அலுவலர் சண்முகம் தலைமையிலான தீயணைப்பு வீரர்கள், ஏ.சி.,யில் பதுங்கி இருந்த 5 அடி நீள சாரை பாம்பை உயிருடன் மீட்டு,அருகிலுள்ள பெரியநெசலூர் காப்பு காட்டுப்பகுதியில் விட்டனர். இதனால், அப்பகுதியில் சற்று பரபரப்பு நிலவியது.

யோகர்ட் வகையினத்தில் நுழையும் லேக்டாலிஸ் இந்தியா அறிமுகம் செய்யும் லேக்டெல் டர்போ

